# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 240/2015

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt.Menaka Gr. III Bench Clerk of this court, on 04.12.2024 in accordance with the provision of Act 1 of 1873.

Name : அய்யம்மாள் (எ) உமா மகேஸ்வரி Husband Name : வடிவேல்

துவக்க நேரம்: 11.35 A.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**8-**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது அப்பா பெயர் என்ன என்றால் மாரிமுத்து ஆகும். அவர் எப்பொழுது இறந்தார் என்றால் கடந்த 2014 - 2015 ஆண்டு வாக்கில் காலமானார். என்னை பள்ளியில் எனது அப்பாதான் சேர்த்தாரா என்றால் ஆமாம். நான் எந்த வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பத்தாம் வகுப்பை முடிக்கும் வரையில் எனது அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார்.

2) எனக்கு திருமணம் ஆகும்பொழுது எனது தகப்பனார் உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கடந்த 24.10.2005 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் எனது தகப்பனார் அவருக்காகவும், அப்பொழுது மைனாரான எனக்கும், எனது சகோதரி மற்றும் ஒரு சகோதரருக்காகவும், எனது தகப்பனாரும், எனது சகோதரியும் சேர்ந்து ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள மைனர்களின் கல்வி மற்றும் பராமரிப்பு செலவிற்காக இந்த ஆவணத்தில் கொண்டுள்ள சொத்தை கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக தற்பொழுது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.240/2015, Dt.04.12.2024.

3) இந்த வழக்கை நான் 8-ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யமுடியாது என்றாலும் இந்த வழக்கை 8-ம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம்: 11. 50 A.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional Distrit Munsif (F.A.C), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.240/2015, Dt.04.12.2024.